**கவனிக்க.**- *2006.10.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.*

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1468 - 2006 ඔක්තෝබර් 20 වැනි සිකුරාදා - 2006.10.20

*1468 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 988 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 989 |

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, ஒற்றோபர் 27 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, ஒற்றோபர் 13 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டு பிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும்.விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன்அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள்-வெற்றிடம்

## சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு

*மின்சார வைத்திய இயந்திர திருத்துனர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல்*

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சின் கீழ் செயல்படும் நிறுவனங்களில் மின்சார வைத்திய இயந்திர திருத்துனர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பின்வரும் தகைமைகள் உள்ள விண்ணப்பதாரி களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன-

1. **கல்வித் தகைமைகள் :**

(i) க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் இரண்டு அமர்வுகட்கு மேற்படாத அமர்வுகளில் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய விடயங்கள் உட்பட 3 திறமைச் சித்திகளுடன் 6 விடயங்கள் ஒரே தடவையில் ஐந்து விடயங்கட்கு குறையாமல் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

(ii) அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் கீழ் மின்சாரம் அல்லது மின்சாரத் தொகுதியில் மூன்று ஆண்டுகள் முழு நேரப் பாடநெறியில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

(iii) இங்கிலாந்தில் ஸிட்டி அன்ட் கில்ஸ் நிறுவனத்தில் மின்சாரம் அல்லது இலத்திரனியல் அல்லது பொறியியல் விஞ்ஞானம் பற்றிய தொழில்நுட்பச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

2. **வயதெல்லை.**- 2006.11.17 ஆந் திகதியில் வயது 18-45 க்கு இடையில் இருத்தல் வேண்டும்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- அரசாங்க நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 6/2006 இன் படி PL - 3 - 2006 சம்பளம் ரூ. 12,360 - 10 x 110 - 10 x 120 - 10 x 130 - 12 x 140 - ரூபா 17,640.

4. **சேவையில் ஈடுபடுத்தும் நியதிகள்.**- இந்த நியமனம் நிரந்தரமனது. பங்களிப்பு ஓய்வூதிய உதவித் தொகையின் கீழ் ஓய்வூதியத்திற்கு உரிமை உண்டு.

5. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

(i) பின்வரும் மாதிரி விண்ணப்பத்தின்படி 8" x 13" அளவுள்ள தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைத் தமது கையெழுத்தால் பூரணப்படுத்தி 2006.11.17 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்பு "சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம், 'சுவசிரிபாய', 385, வண. பத்தேகம விமலவன்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் மாத்திரம் அனுப்ப வேண்டும். தாமதமாகிப் பெறப்படும் விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படும்.

(ii) விண்ணப்பங்கள் அனுப்பப்படும் தபால் உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் "மின்சார வைத்திய இயந்திர திருத்துனர் பதவிக்கான விண்ணப்பம் - 2006" என எழுதப்பட வேண்டும்.

(iii) *கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல்.*- அரசாங்க பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சமய சம்பந்தப்பட்ட நிர்வாகத் தலைவர்கள் அல்லது பொறுப்பாளர்கள் அல்லது ரூ. 1,24,080 க்குக் குறையாத சம்பளம் பெற்றுக்கொள்ளும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பப்படிவத்தில் வேட்பாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(iv) *தேர்ந்தெடுத்தல்.*- கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்களைப் பரீட்சித்ததில் தகுதிபெற்ற விண்ணப்பதாரிகள் வாய்மொழி/பிரயோகப் பரீட்சை மூலம் அரசாங்க நிர்வாக சுற்று நிருப இல. 15/90 மற்றும், 30/91 க்கும் அமைய தெரிவு செய்யப்படுவர்.

வைத்திய கலாநிதி எச். ஏ. பீ. கஹந்தலியனகே,
சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம்.

சுகாதார பராமரிப்பு, போஷணை அமைச்சு,
385, வண. பத்தேகம விமலவன்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2006.10.04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு**

*மின்சார வைத்திய இயந்திர திருத்துனர் பதவி*

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆ) முழுப் பெயர் :-----.

2. வசிக்கும் மாவட்டம் :-----.
தேர்தல் தொகுதி :-----.
நிரந்தர முகவரி :-----.

3. (1) பிறந்த திகதி :-
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

2006.11.17 ஆந் திகதிக்கு வயது :-
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.
(2) தேசிய அடையாள அட்டை இல. :-----.

4. (1) ஆணா/பெண்ணா :-----.
(2) விவாகமானவரா/அல்லாதவரா :-----.

5. இனம் :-----.

6. கல்வித் தகைமை :-----.
(பரீட்சை/விடயம்/தரம் விபரங்களைத் தரவும்)

7. தொழிற் தகைமை (பதவிக்குரிய) :-----.

8. வேறு தகைமைகள் :-----.

என்னால் தரப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட விடயங்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானவை எனவும் சரியானவை

எனவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு அல்லது முன்பு இத்தகவல்கள் பொய்யானவை என்றோ பிழையானவை என்றோ தெரிய வந்தால் நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

..........................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ...................................... ................................................................... என்பவரை நான் நன்கு அறிவேன் என்றும் அவர் 2006 ............................ ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டாரெனவும் உறுதிப்படுத்துகிறேன்.

.........................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்,

முழுப் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

10-425

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அமெச்சூர் வானொலி இயக்குநர்களின் திறமைச் சான்றிதழ்களுக்கான பரீட்சை

***திறமைச் சான்றிதழ்களுக்கான வகைகள்:***

(அ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் உயர்தர வகுப்பு திறமைகாண் சான்றிதழ் ;

(ஆ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் பொது வகுப்பு திறமைகாண் சான்றிதழ் ;

(இ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் புதுப் பயிலுநர் வகுப்பு "அ" திறமைகாண் சான்றிதழ் ;

(ஈ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் புதுப் பயிலுநர் வகுப்பு "ஆ" திறமைகாண் சான்றிதழ் ;

2. **பரீட்சை எடுக்க விரும்புவோருக்கான ஆகக் குறைந்த தேவைப்பாடுகள்.**- இப் பரீட்சை எடுக்க விரும்பும் ஒவ்வொருவரும் பதினான்கு (14) வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

3. **பரீட்சைத் திட்டம் :**

(அ) *உயர்தர வகுப்பு.*- பரீட்சை இரு பகுதிகளைக் கொண்டுள்ளது : -

***பகுதி 1 :*** இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I : உயர் மின்னியல் தொழில் நுட்ப வானொலித் தொலைத்தொடர்புகள் (3 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II : உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அவதான நடவடிக்கை முறைகள் - (2 மணித்தியாலங்கள்)

***பகுதி 2 :*** செயல் முறை மோர்ஸ் (Morse) கோட் பரீட்சை (ஒரு நிமிடத்தில் 20 சொற்கள்)

(ஆ) *பொது வகுப்பு .*- பரீட்சை இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

***பகுதி 1 :*** இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I : அடிப்படை மின்னியல் தொழில் நுட்ப வானொலித் தொலைத்தொடர்புகள்- (2 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II : உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அத்துடன் நடவடிக்கை முறைகள் (1 மணித்தியாலம்)

***பகுதி 2 :*** செயல் முறை : மோர்ஸ் (Morse) கோட் பரீட்சை (ஒரு நிமிடத்தில் 12 சொற்கள்)

(இ) *புதுப் பயிலுநர் வகுப்பு 'அ' பரீட்சை.*- இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.-

***பகுதி 1 :*** இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I : அடிப்படை மின்னியல், வானொலி மற்றும் இலத்திரனியல் கோட்பாடுகள்.- (2 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II : உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அத்துடன் நடவடிக்கை முறைகள் (1 மணித்தியாலம்)

***பகுதி 2 :*** செயல் முறை : மோர்ஸ் (Morse) கோட் பரீட்சை (ஒரு நிமிடத்தில் 5 சொற்கள்)

(ஈ) *புதுப் பயிலுநர் வகுப்பு.*- **'ஆ'** ஒரே அமர்வில் இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு விடையளிக்க வேண்டும்.-

வினாத்தாள் I : அடிப்படை மின்னியல், வானொலி இலத்திரனியல் கோட்பாடுகள்- (பல்தேர்வு வினாக்கள் - 2 மணித்தியாலங்கள்) (பரீட்சையில் சித்தியடைய 50% புள்ளிகள் எடுத்தல் வேண்டும்.)

வினாத்தாள் II : உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அத்துடன் நடவடிக்கை முறைகள் (பல்தேர்வு வினாக்கள் - 1 மணித்தியாலம்) (பரீட்சையில் சித்தியடைய 50% புள்ளிகள் எடுத்தல் வேண்டும்.)

புதுப் பயிலுநர் வகுப்பு ‘ஆ’ மோர்ஸ் (Morse) கோட் (செயல் முறை) பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதில்லை.

4. **பரீட்சைக்களுக்கான நிபந்தனைகள்.**- எல்லாத் திறமைச் சான்றிதழ்களின் பகுதிகளுக்கும் பின்வரும் நிபந்தனைகள் ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(i) பரீட்சையில் சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் எல்லாப் பகுதிகளிலும் சித்தியடைதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் பகுதி 1 இல் (இரண்டு எழுத்துமூல வினாத்தாள்கள்) ஒரே அமர்வில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) இப்பரீட்சையின் பகுதி 1 இல் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மட்டுமே பகுதி 2 இற்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் ;

(iv) பகுதி 1 இல் சித்தியடையும் பரீட்சார்த்திகள் ஏதாவது அடுத்துவரும் பரீட்சைகளில் பகுதி 2 இற்கு மட்டும் விண்ணப்பிக்கலாம்.

5. **பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்.**- இப் பரீட்சை ஆங்கில மொழி மூலம் மாத்திரம் நடாத்தப்படும்.

6. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர்கள் தங்களின் பரீட்சைக் கட்டணங்களை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். மேலும் விபரங்கள் தேவைப்படின் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்துடன் எழுத்துமூலம் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பரீட்சைக் கட்டணமானது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பேரில் காசுக்கட்டளையாகவோ அல்லது எந்தவொரு வங்கியினதும் காசோலையாகவோ செலுத்தப்படலாம்.

நுழைவுப் படிவமானது, பதியப்பட்ட ஒப்படைப்பு மூலம் அல்லது பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது நேரடியாகக் கொண்டுவந்து கொடுக்கப்படுதல் வேண்டும். உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு வைத்திருக்கப்படுதல் வேண்டும். ஏனெனில் தபால் மூலம் அனுப்பப்பட்டதற்கான அல்லது நேரடியாகச் சமர்பிக்கப்பட்டதற்கான நிரூபணம் சமர்ப்பிக்கப்பட்டாலன்றி நுழைவுப் படிவம் ஒன்று கவனிக்கப்படவில்லை அல்லது தொலைந்து போயிற்று என்ற உரிமைக் கோரிக்கை எதனையும் இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு கவனத்திற் கொள்ளாது. கட்டணங்கள் மீளளிக்கப்படமட்டாது. அத்துடன் அவை ஒரு பரீட்சையிலிருந்து பிந்திய திகதியொன்றில் இன்னொரு பரீட்சைக்கும் மாற்றப்படமுடியாது. தமது விண்ணபத்தை மீளப்பெறுகின்ற அல்லது ஏதேனும் காரணத்துக்காக பரீட்சைக்குத் தோற்ற முடியாத பரீட்சார்த்தி எவரும் ஏதேனும் பிந்திய நுழைவுக்காக முழுப் பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்துமாறு தேவைப் படுத்தப்படுவார்கள்.

| பரீட்சையின் வகை | பகுதி 1 இற்கான கட்டணம் ரூபா | பகுதி 2 இற்கான கட்டணம் ரூபா |
|---|---|---|
| உயர்தர வகுப்பு | 276 | 138 |
| பொது வகுப்பு | 138 | 138 |
| புதுப்பயிலுநர் வகுப்பு "அ" | 138 | 69 |
| புதுப்பயிலுநர் வகுப்பு "ஆ" | 138 | - |

7. **விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியும் நுழைவும்.**- பரீட்சை ஒரு வருடத்தில் மூன்று முறைகள் நடாத்தப்படும். பரீட்சைத் திகதி , பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பின்னர் அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் தோதான நுழைவுப் படிவத்தில் செய்யப்படல் வேண்டும். அப்படிவங்களில் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் பெறப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டு அம்முகவரிக்கு இறுதி நுழைவுத் திகதிக்கு முன்பதாக அனுப்பப்படல் வேண்டும் :-

தொலைத் தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்,
276, எல்விட்டிகல மாவத்தை,
மனிங் ரவுன்,
கொழும்பு 08.

| சான்றிதழ்களின் வகை | இறுதி நுழைவுத் திகதி |
|---|---|
| உயர்தர வகுப்பு | 24. 11. 2006 |
| பொது வகுப்பு | 24. 11. 2006 |
| புதுப்பயிலுநர் வகுப்பு ‘அ’ | 24. 11. 2006 |
| புதுப்பயிலுநர் வகுப்பு ‘ஆ’ | 24. 11. 2006 |

8. **அத்தாட்சிப்படுத்தல்.**- பரீட்சார்த்தியின் கையொப்பம் பின்வரும் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்:-

சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசுத் தரைப்படை, கடற்படை அல்லது வான் படை ஆகியவற்றின் ஆணையளிக்கப்பட்ட அலுவலர், வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பொலிஸ் அலுவலர், அரசாங்க சேவையில் ஆண்டொன்றுக்கு 42,720 ரூபாவுக்குக் குறையாத திரட்டிய சம்பளம் பெறும் நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலர்.

இவ்வாறு அமையாத மற்றைய விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

9. **பரீட்சார்த்திகளை இனம் காணல்.**- பரீட்சையில் பரீட்சார்த்தி ஒருவர் தமது ஆள் அடையாளத்தைக் காட்டுமாறு தேவைப்

படுத்தப்படுவார். அதற்காக பின்வரும் ஆவணங்களில் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படும்:-

(அ) அஞ்சல் மா அதிபதியால் வழங்கப்பட்ட செல்லுபடியான ஆளடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு ;

(இ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை .

எல்லாப் பரீட்சார்த்திகளும், 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கப் பரீட்சைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செயல்படுமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

இவ்விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளின் கீழ் ஏற்பாடு செய்யப்படாத விடயம் எதுவும் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் தீர்த்து வைக்கப்படும்.

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்.

இலங்கைத் தொலைத்தொடர்புகள்
ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,
276, எல்விட்டிகல மாவத்தை.
மனிங் ரவுன்,
கொழும்பு 08.
2006, ஒற்றோபர் 20.

10-396